**கவனிக்க.-** இவ்வாரம் வெளியாகும் வர்த்தமானி பகுதி VI இல் 2026 ஆம் ஆண்டுக்கான காலி மாவட்டத்தின் நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2481 - 2026 මාර්තු මස 20 වැනි සිකුරාදා - 2026.03.20

2481 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 670 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 683 |


**கவனிக்க.-**தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை (திருத்தம்) சட்டமூலம் 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**கவனிக்க.-**பணம் தூய்தாக்கல் தடை (திருத்தம்) சட்டமூலம் 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**கவனிக்க.-** நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தம்) சட்டமூலம் 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, மாச்சு மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

## இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025 (2026)

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பில் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தலுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **ஆட்சேர்ப்பு முறை** : இவ் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண் ணப்பதாரிகளிடையே, கணக்காய்வுச் சேவை ஆணைக் குழுவால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இலங்கை அரச கணக் காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 3 இல் குறிப்பிடப்பட்டதற்கமைய பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக (இல. 5 இல் குறிப்பிடப்பட்ட) புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை களுக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

| *புள்ளிகளை வழங்குவதற்குரிய பிரதான விடயங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| பதவிக்குரிய துறைகளில் பெற்றுள்ள அனுபவம் | 40 |
| தகவல் தொழில்நுட்பம் / கணினி தொடர்பான இயலுமை பற்றிய தகைமைகள் | 05 |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறன்கள் | 10 |
| மொத்தம் | 100 |

**குறிப்பு** : ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமை களுக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. **அவசியமான தகைமைகள்** : ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினமன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I. கல்வித் தகைமைகள் : பொருத்தமில்லை.

II. தொழிற் தகைமைகள் :
பட்டய சிவில் பொறியியலாளராதல்.

(இப் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்க்கப் படுகையில் பட்டய சிவில் பொறியியலாளர் களுக்காக ஒரு பதவி மாத்திரமே ஒதுக்கப் பட்டுள்ளது.)

III. **அனுபவம் :**
உரிய தொழிற் தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், உரிய துறையில் நிறைவேற்று தரத்தில் 12 வருட சேவைக்கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்,

(இது தொடர்பாக சேவைக்காலத்தைக் கருத்திற் கொள்கையில் முழுச் சம்பளத்துடனானதும், அரைச் சம்பளத்துடனான மற்றும் சம்பள மற்ற கல்வி விடுமுறைகள் கருத்திற்கொள்ளப் படமாட்டாது.)

IV. **உடல் ரீதியான தகுதி :**

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமைகளை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

V. **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.
(ii) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.
(iii) ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.
(iv) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித் தலில் தரப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப் படும் இறுதித் திகதியன்று எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

VI. **வயது** :

2026.04.20 ஆம் திகதி 35 வயதிற்குக் குறைவற்றதாகவும் அன்றைய தினத்தில் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன் படி 1981.04.20 ஆம் திகதி முதல் 1991.04.20 ஆம் திகதி வரை அத் திகதிகள் உள்ளடங்கலாக பிறந்த தினங்கள் உள்ளடங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

(அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரி களுக்கான ஆகக்கூடிய வயது பொருத்தமற்ற தாகும்.)

3. **வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெறத்தக்கது. நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரி இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். இருப்பினும், அந்த அதிகாரியின் முன்னைய சேவைக்காலம் மற்றும் அனுபவம் புதிய பதவிக்கான தகுதி மற்றும் தேவையாக இல்லாதவிடத்து, அவர் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி இப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாக முன்னர் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக, வேறொரு அரசகரும மொழியில் பொருத்தமான புலமையைப் பெற வேண்டும், மேலும் அரசகரும மொழி அல்லாத வேறு மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகளால் தகுதிகாண் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைகளுக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மற்றைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கப்பட்ட மொழி, பின்னர் மாற்றப்பட அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் நீங்கள் நியமனத்திற்குத் தகுதியுடைய மொழி, உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழியாக இருக்கும்.

4. **சம்பள அளவுத் திட்டம்** : 2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைப் படி, இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 86,950- 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ. 200,770.00 (படி நிலை 20) ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 03 - 2025 ஆவதுடன் ஆரம்பச் சம்பளப் படி ரூபா 138,370.00 ஆகும். (2027.01.01 ஆந் திகதி வரை, அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.) இதற்கு மேலதிகமாக, பதவிக்கு உரித்தான வகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

5. கட்டமைக்கப்பட்ட நேரமுகப் பரீட்சைக்காக பின்வரும் மதிப்பெண் நடைமுறை பயன்படுத்தப்படும்.

| *தொடர் இல.* | *விடயம்* | | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | | 25 |
| | (அ) | பொதுப் பட்டம் | 10 | |
| | (ஆ) | விசேட பட்டம் | 11 | |
| | (இ) | 2 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 11 | |
| | (ஈ) | 2 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 13 | |
| | (உ) | 1 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 13 | |
| | (ஊ) | 1 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 15 | |
| | (எ) | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரசாங்க நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 18 | |

| *தொடர் இல.* | *விடயம்* | | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| | (ஏ) | MA/MSC அல்லது அதற்கு இணையான ஏனைய பட்டம்<br><br>(அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரசாங்க நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 20 | |
| | (ஐ) | மேற்குறித்த (ஏ) இல் குறிப்பிடப்பட்ட பட்டத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பட்டம்<br><br>(அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரசாங்க நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 25 | |
| 02. | **மேலதிக தொழிற் தகைமை :**<br>(அடிப்படையான தொழிற் தகைமைக்கு மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட உயரிய தகைமை ஒன்றிற்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | | |
| | (அ) | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் / உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமா (07 புள்ளிகள்) | 07 | |
| | (ஆ) | பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச்சான்று II/ இடைநிலை மட்டப் பரீட்சை / கணக்கீடு மற்றும் வியாபாரச் சான்றிதழ் II/ வியாபார மட்டம்/ பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் II பரீட்சையில் சித்தியடைதல் | 09 | 20 |
| | (இ) | பட்டயக் கணக்காளர் நிறுவக இறுதி I ஆவது பகுதிப் பரீட்சை / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் III பரீட்சையில் சித்தியடைதல் | 12 | |
| | (ஈ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அசோசியேட் அங்கத்தவராயிருத்தல் | 15 | |
| | (உ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உயர் (fellow) அங்கத்தவராயிருத்தல் | 20 | |
| 03. | **தகவல் தொழில்நுட்பம் / கணினி இயலுமை தொடர்பான தகைமை :**<br>பல்கலைக்கழமொன்றால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 6 மாதங்களுக்கு மேற்பட்ட கணினிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல். | | 05 | 05 |

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக, பதவிக்கு தொடர்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவத்திற்கு ஆண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 40 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயல்திறனுக்கு அதிகபட்சம் 10 புள்ளிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்:**

சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரல் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய ஆளடையாள அட்டை:

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:**

(i) விண்ணப்பங்களை “செயலாளர், கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, இல.35/ஏ, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08”, எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2026.04.20 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறத்தக்க வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரி படிவம் ஒன்று இவ் அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தை இல. 01 முதல் இல. 04 வரையிலும், இரண்டாவது பக்கத்தை இல. 05 முதல் இல.08 வரையிலும், மூன்றாவது பக்கத்தை இல. 09 முதல் இல.10 வரையிலும் வரிசைப்படுத்தி, தங்கள் சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அடங்கிய மேலுறையில் இடது பக்க மேல் மூலையில் “நேரடி முறையில் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்கான ஆட்சேர்ப்பு” என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர்/சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது ரூபா 71,240.00 அல்லது அதற்கு மேலதிகமான மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(v) விண்ணப்பம் தபாலில் தொலைந்து போன தாகவோ அல்லது தாமதமாகிவிட்ட தாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படா. இறுதித் திகதி வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) வெளிநாட்டில் வாழும் இலங்கை விண்ணப்ப தாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக தாம் வாழும் நாட்டில் அல்லது அண்மித்த நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை முகவர் அலுவல கத்திற்கு குறித்த காலப்பகுதியில் சுயவிருப்பில் சமர்ப்பிக்க முடியும்.

(vii) மருத்துவப் பரிசோதனைக்கான தேர்ச்சிப்பத்திரம் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் சேவைக்கு நியமனம் பெறுவதற்காக வெளிநாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இலங்கை விண்ணப்பதாரி எனில், அவர் சேவைக்காக உடல் ரீதியாகத் தகுதியானவரா என்பதை அறிந்துகொள்வதற்காக அங்கீகரிக்கப் பட்ட மருத்துவர் ஒருவரின் முன்னிலையில் ஆய்விற்காக தோற்ற வேண்டும். அவ் ஆய்விற்கான கட்டணம், இலங்கைக்கு வருகை தருவதற்காக அவர்களுக்கான விமானச் சீட்டிற்கான செலவுகள் அவ் விண்ணப்ப தாரியாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(viii) அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபன சேவையில் உள்ள அதிகாரிகளால் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் மூலம் குறித்த தினத்தில் அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் எனக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலும் இந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரியின் பெயருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைக்கலாகாது.

(ix) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண் ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் குறித்து எந்தவித முறைப்பாடும் ஏற்கப்படமாட்டாது.

(x) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு நகல் பிரதியுடன் இணைக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வேறு எந்த ஆவணத்தையும் இணைத் தலாகாது.

(அ) தேசிய ஆளடையாள அட்டையின் சான்றளிக்கப் பட்ட பிரதி.

(ஆ) பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(குறிப்பு:- ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது இரண்டாம் நிலைப் பள்ளிகள் தொடர்பான ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படாது.)

(இ) சாதாரண பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ் களின் பிரதிகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது)

(ஈ) முக்கிய தொழிற்தகைமைகள் (இந்த அறிவிப்பின் 2. II இன் படி) மற்றும் மேலதிகமாக தொழிற் தகைமைகளுக்கான (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) சான்றளிக் கப்பட்ட பிரதிகள்.

(உ) பதவியுடன் தொடர்புடைய துறையில் தொழிற்துறை அனுபவம் குறித்த சான்றிதழ்கள்

(ஊ) தகவல்தொழில்நுட்பம்மற்றும்கணினிஇயலுமை தொடர்பான தகைமைகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது).

(எ) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவை / கூட்டுத்தாபன சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந் தாது.)

**குறிப்பு** - நேர்காணலின் போது, தொடர்புடைய ஆவணங்களின் அசல் பிரதிகள், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றளிக் கப்பட்ட பிரதிகள் உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பப் படிவத்தில் தங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனக் கண்டறியப் பட்டால், உங்கள் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட் பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப் பதற்கான உரிமையை கணக்காய்வு சேவை ஆணைக் குழு கொண்டுள்ளது.

10. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் இணங்காமை அல்லது முரண்பாடு இருக்குமிடத்து, சிங்கள மொழி அமுலாகும்.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

டி.கே. விஜேசிங்ஹ,
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

கணக்காய்வு சேவை ஆணைக்குழு,
இல. 35/ ஏ, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025 (2026)**

(அலுவலக பாவனைக்கு மட்டும். )

(விண்ணப்பிக்கும் மொழிமூலம் மற்றும் உரிய எண்ணை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழிமூலம் மாற்றப்பட மாட்டாது.

---

01. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ..............................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

(ii) முழுப்பெயர் : ..............................................................................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: ..............................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உ+ ம்: GUNAWARDHANA, M. G. B. S. K.

02. (i) நிரந்தர முகவரி :……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(ii) தொலைபேசி இலக்கம் : நிலையான

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

கையடக்க

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. (i) பால் நிலை: ……………………………………………………………………………………

(ii) விவாகமானவர் / விவாகமாகாதவர் என்பது பற்றி: ………………………………………………………

04. (i) பிறந்த திகதி :

ஆண்டு :…………… மாதம் :…………… திகதி :…………..

(ii) 2026.04.20 ஆம் திகதிக்கு வயது:

வருடங்கள் :……….. மாதங்கள் : ………….. நாட்கள் : ………..

(iii) தாங்கள் இலங்கை குடியுரிமையை வம்சாவளி மூலம் அல்லது பதிவின் மூலம் பெற்றுள்ளீர்களா என்பது? ……………
……………………………………………………………………………………………………………

(iv) இனம் :………………………………………………………………………………………………

(v) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05. (i) இந்த பதவிக்குரியதாக கோரப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள கல்வித் தகைமைகள்:

| *பரீட்சை* | *ஆண்டு* | *பாடங்கள்* |
|---|---|---|
| | | |
| | | |

(ii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழிற் தகைமைகள்:

| *தகைமைகள்* | *ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

(iii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள துறை ரீதியான அனுபவம்:

| *பதவி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* |
|---|---|---|
| | | |
| | | |

(iv) மொழித் தேர்ச்சி :

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

06. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(i) பதவி : ………………………………………………………………………………………………

(ii) திணைக்களம் / நிறுவனம் : …………………………………………………………………………

(iii) நியமனத் திகதி : ……………………………………………………………………………………………

(iv) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா அல்லது ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது : ………
……………………………………………………………………………………………………………

(v) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : ……………………………………………………………………………

(vi) தற்போதைய வருடாந்த சம்பளம் : ……………………………………………………………………………

07. உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக்கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடவும் :

(i) ……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிப் படுத்துகின்றேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், நியமனத்தின் பின்னர் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டால் எனக்கு எதுவித நட்டஈடும் வழங்காது என்னை சேவையிலிருந்து அகற்றுவதற்கும் உடன்படுவதை நான் அறிந்து வைத்துள்ளேன்.

…………………………………
திகதி : ……………………….. விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி …………………. நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், …………… மாதம் …….. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

…………………………………………...
கையொப்பத்தினை சான்றுபடுத்தியவரின் கையொப்பம்

திகதி : ……………………………………………………

இடம் : ……………………………………………………

(உத்தியோகபூர்வ முத்திரையிடுக)

10. விண்ணப்பதாரர் அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்கள தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………………… அவர்கள் …………………. ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை திருப்திகரமானதாக உள்ளது எனவும், விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், மேற்படி 05 இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் பரிசோதிக்கப்பட்டது எனவும், அவை சரியானவை எனவும், …………. மாதம் ……….ஆம் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

……………………………………………………………
அரசாங்க/மாகாண அரசாங்க நிறுவனத்தின் தலைவர்
அல்லது அவரால் அதிகாரமளிப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம்.

திகதி : …………………………

03-623

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்

## அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் விஞ்ஞான ஆராய்ச்சி அலுவலர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளல் - 2026

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் 50 விஞ்ஞான ஆராய்ச்சி அலுவலர் பதவி வெற்றிடங்களுக்கு ஒப்பந்தஅடிப்படையில்ஆட்சேர்ப்புச்செய்துகொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி 2026.04.06 ஆகும்.

இப்பதவி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பதவியொன்றாகும் என்பதுடன், நிரந்தர நியமனம் பெற்றுக் கொள்வதற்கு அல்லது நிரந்தர நியமனம் பெற்றுள்ள அலுவலர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகளுக்கு அல்லது உரித்துக்கள் இல்லாத பதவியொன்றாகும். இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்வது ஒரு வருட காலப் பகுதிக்கு மாத்திரமாகும்.

01. **விஞ்ஞான ஆராய்ச்சி அலுவலர் (ஒப்பந்த) கடமை விபரம் :**

வழக்குத் தடயப்பொருட்களைப் பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக ஆய்வுகூட பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனை அறிக்கைகளை தயார் செய்வதற்கு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் உதவி வழங்கும் பணிகள்.

02. **கொடுப்பனவு** :

**மாதாந்தக் கொடுப்பனவு** - ரூபா 74,438.00 மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 17,800.00 ஆகும்.

03. **வயதெல்லை** :

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

04. (I) **கல்வித் தகைமைகள்** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படுகின்ற இரசாயனவியலை பிரதான பாடமாகக் கொண்டுள்ள விஞ்ஞானப் பட்டம்

அல்லது

இலங்கைப் பாராளுமன்ற சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படுகின்ற இரசாயனவியலை பிரதான பாடமாகக் கொண்டுள்ள விஞ்ஞானப் பட்டம்

அல்லது

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 25 அ பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படுகின்ற இரசாயனவியலை பிரதான பாடமாகக் கொண்டுள்ள விஞ்ஞானப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

(II) **உடல்சார் தகைமை** :

ஒவ்வொரு அபேட்சகரும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல்சார் மற்றும் உளவியல்சார் தகைமையைக் கொண்ட வராக இருத்தல் வேண்டும்.

05. **ஏனையன:**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியில் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

06. **ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் முறை** :

தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை மூலம் மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை மூலம்

i. சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது அடிப்படைத் தகைமைகள் பரிசோதிக்கப்படுவ துடன், புள்ளி வழங்கப்பட மாட்டாது.

ii. தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் பின்வரும் புள்ளி வழங்கும் நடவடிக்கை முறை பின்பற்றப்படும்.

| *தொடர் இல.* | *புள்ளி வழங்கப்படும் பிரதான துறைகள்* | *உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை* | *வழங்கப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் : | | |
| | (I) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்டுள்ள வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழக மொன்றிலிருந்து வழங்கப்படுகின்ற அல்லது இலங்கைப் பாராளுமன்ற சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து வழங்கப்படுகின்ற அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழான நிறுவனமொன்றிலிருந்து – இரசாயனவியல் பற்றிய நான்கு வருட விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்<br>• முதலாம் வகுப்பு சித்தியுடன் 10<br>• இரண்டாம் மேல் வகுப்புச் சித்தியுடன் 8<br>• இரண்டாம் கீழ் வகுப்புச் சித்தியுடன் 5 | 25 | |
| | (II) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்டுள்ள வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழக மொன்றிலிருந்து வழங்கப்படுகின்ற அல்லது இலங்கைப் பாராளுமன்ற சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து வழங்கப்படுகின்ற அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25ஏ பிரிவின் கீழான நிறுவனமொன்றிலிருந்து – இரசாயனவியலை பிரதான பாடமாக கற்றுக் கொண்டுள்ள விஞ்ஞானப் பட்டத்தைப் பெற்றிருத்தல்<br>• முதலாம் வகுப்பு சித்தியுடன் 8<br>• இரண்டாம் மேல் வகுப்புச் சித்தியுடன் 5<br>• இரண்டாம் கீழ் வகுப்புச் சித்தியுடன் 3<br>மேலே I மற்றும் II தகைமைகளில் ஒன்றுக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.<br>(பெற்றுக் கொள்ளக்கூடிய உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை 10 ஆகும்.) | 25 | |
| | (III) குறித்த துறை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றிலிருந்து வழங்கப்படுகின்ற அல்லது இலங்கைப் பாராளுமன்ற சட்டத்தினால் தாபிக்கப் பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து வழங்கப்படுகின்ற அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழான நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்டுள்ள – இரசாயனவியல் பற்றிய<br>• பட்டப் பின் படிப்புக்கு 15 புள்ளி<br>• பட்டப் பின் டிப்ளோமாவுக்கு 10 புள்ளி<br>(உச்சளவான தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும். உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை 15 ஆகும்.) | | |

| *தொடர் இல.* | *புள்ளி வழங்கப்படும் பிரதான துறைகள்* | *உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை* | *வழங்கப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 02. | **துறைசார் அனுபவம் :**<br>I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்க பல்கலைக் கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்ற சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகமொன்றில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழான நிறுவனமொன்றில் ஆர்ப்பாட்டக்காரர் (Demonstrator)<br>ஆக பெற்றுள்ள அனுபவம்,<br>• ஒரு வருடத்திற்கு 10<br>• 06 மாதங்களுக்கு மேல் 08<br>• 03 மாதங்களுக்கு மேல் 05<br>• 03 மாதங்களுக்கு குறைவாக – புள்ளி வழங்கப்பட மாட்டாது.<br>(I தொடர்பில் பெற்றுக் கொள்ளக்கூடிய உச்சளவான புள்ளி களின் எண்ணிக்கை 30 ஆகும்)<br>II. அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் ஆரம்ப நிலைப் பயிற்சியை பூர்த்தி செய்திருத்தல்.<br>• ஒரு வருடத்திற்கு 20<br>• 06 மாதங்களுக்கு மேல் 15<br>• 03 மாதங்களுக்கு மேல் 12<br>• 03 மாதங்களுக்கு குறைவாக 06<br>(II தொடர்பில் பெற்றுக் கொள்ளக்கூடிய உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை 20 ஆகும்)<br>III. அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் இரசாயன ஆய்வு கூடங்களில் ஆராய்ச்சி அலுவலர், இரசாயன ஆய்வுகூட உதவியாளராக,<br>• ஒரு வருடத்திற்கு 10<br>• 06 மாதங்களுக்கு மேல் 08<br>• 03 மாதங்களுக்கு மேல் 05<br>• 03 மாதங்களுக்கு குறைவாக இருப்பின் புள்ளி வழங்கப்பட மாட்டாது.<br>(III தொடர்பில் பெற்றுக் கொள்ளக்கூடிய உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை 10 ஆகும்)<br>துறைசார் அனுபவங்களுக்கு புள்ளி வழங்கும் போது சேவைக் காலத்திற்கு புள்ளி வழங்கப்படும்.<br>சேவைக் காலத்தை உறுதி செய்வதற்கு முறையான சேவைசார் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். | 60 | |
| 03. | **ஆராய்ச்சிக் கட்டுரை :**<br>I. உள்நாட்டு வெளிநாட்டு ரீதியாக துறைசார் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பித்திருத்தல்.<br>(ஒரு கட்டுரைக்கு 05 புள்ளிகள் வீதம் ஆராய்ச்சிக் கட்டுரைகள்/ 02 அறிக்கைகளுக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும். பட்டம் அல்லது பட்டப் பின் படிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு புள்ளி வழங்கப்பட மாட்டாது.) | 10 | |
| 04. | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை :**<br>i. தொடர்பாடல் ஆற்றல்<br>ii. ஆளுமை | 05 | |
| | மொத்தம் | 100 | |

iii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்கு நேர்முகப் பரீட்சைக் குழுவிடம் அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

iv. தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள மற்றும் அடிப்படைத் தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரிகளிலிருந்து காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

07. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

i. விஞ்ஞான ஆராய்ச்சி அலுவலர் (ஒப்பந்தம்) பதவியில் கடமையாற்றி வருகின்ற யாதாயினு மொரு சந்தர்ப்பத்தில் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது வேறு ஏதெனுமொரு சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரரினால் / அவர் சார்பாக வழங்கப்பட்டுள்ள / வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை மற்றும் தத்துவமுள்ளவை அல்ல என்பது வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் எந்த வொரு முன் அறிவித்தல் அல்லது நட்டஈடும் செலுத்தாது உடனடியாக அமுலுக்குவரும் வகையில் உங்களின் சேவையைப் பெற்றுக் கொள்வது முடிவுறுத்தப்படும்.

ii. விஞ்ஞான ஆராய்ச்சி அலுவலர் (ஒப்பந்தம்) ஆக தெரிவு செய்துகொள்ளப்படும் ஒருவருக்கு மேற்படி தெரிவின் அடிப்படையில் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் அல்லது வேறு எந்தவொரு அரசாங்க நிறுவனமொன்றில் எந்தவொரு நிரந்தரப் பதவியையும் பெற்றுக் கொள்ள விசேட உரிமை இல்லை.

08. **சேவைசார் நிபந்தனைகள் :**

i. ஒவ்வொரு நியமனம் தொடர்பிலும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2023/29 ஆம் இலக்க 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள நடவடிக்கைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஏற்புடையதாக இருக்கும்.

ii. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரினால் காலத்திற்குக் காலம் விதித்துரைக்கப்படுகின்ற ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்படுவ தற்கும் இணங்குதல் வேண்டும்.

09. **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:**

சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியமைப்பு இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தை A4 அளவிலான தாளில் தயார் செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விஞ்ஞான ஆராய்ச்சி அலுவலர் (ஒப்பந்தம்)" எனக் குறிப்பிட்டு, "அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், இல. 31, இசுரு மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு 2026.04.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அத்திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

10. **விண்ணப்பப்படிவங்களை சான்றுப்படுத்தல்:**

விண்ணப்பப்படிவத்தில் உள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதிவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி முப்படைகளின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் அல்லது அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலைத் தரத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் சான்றுப்படுத்தல் வேண்டும்.

11. விண்ணப்பப்படிவங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமடைந்தமை தொடர்பாக எந்தவொரு முறைப் பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

12. வெற்றிடங்களை நிரப்புவது, நிரப்பாதிருப்பது அல்லது ஒரு பகுதியை மாத்திரம் நிரப்புவது பற்றிய இறுதி முடிவு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரித்தானது.

13. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான அறிவித்தல்களுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுமாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான உரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளே தத்துவமுள்ளதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,

சனாதிபதி சட்டத்தரணி அயேஷா ஜினசேன,
செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு,
இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு – 10,
2026, மார்ச்சு 13.

**அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்**

**ஒப்பந்த அடிப்படையில் விஞ்ஞான ஆராய்ச்சி அலுவலர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம்**

01.

i. முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்) :------------------

ii. முழுப் பெயர் (ஆங்கிலத்தில்):-----------------------

iii. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்) : -------------------

iv. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்): :-----------------------

02. நிரந்தர முகவரி :

i. சிங்களம்/தமிழில் : -----------------------

ii. ஆங்கிலத்தில்: -------------------

iii. தொலைபேசி இலக்கம் (வீடு) :--------------- (கையடக்க) :-------------------

03. பிறந்த திகதி : | | | | | | | | |

2026.04.06 ஆந் திகதிக்கு வயது (விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு):

வருடங்கள்: | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

04. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

05. மாவட்டம் : (சிங்களம்/தமிழில்) [ ] (ஆங்கிலத்தில்): [ ]

06. பிரதேச செயலாளர் பிரிவு : கிராம அலுவலர் பிரிவு :

(சிங்களம்/தமிழில்) [ ] (சிங்களம்/தமிழில்) [ ]

(ஆங்கிலத்தில்): [ ] (ஆங்கிலத்தில்): [ ]

07. கல்வித் தகைமைகள்:

i. பெற்றுள்ள பட்டம்:

| *செல்லுபடியாகும் திகதி* | *துறை* | *நிறுவனம்/பல்கலைக்கழகம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

08. மேலதிக கல்வித் தகைமைகள்:

| *செல்லுபடியாகும் திகதி* | *துறை* | *நிறுவனம்/பல்கலைக்கழகம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

09. துறைசார் அனுபவம் :

10. ஆராய்ச்சி தொகுப்புக்கள் /ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பித்தல் :

11. நீங்கள் யாதாயினுமொரு குற்றச்சாட்டுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் குறிப்பிட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதி செய்கின்றேன்.

(ஆ) இதில் உள்ளடங்கும் விடயங்கள் எதுவும் உண்மைக்கு முரணானவை அல்லது தவறானவை என்று என்னைத் தெரிவு செய்துகொள்ள முன்னர் வெளிப்படுத்தப்படுமாயின் தகுதியற்றவனாக்கப்படுவதற்கு உட்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட பின்னர் அவ்வாறான நிலைமை வெளிப்படுத்தப்படுமாயின் எனது சேவை முடிவுத்தலுக்கு உள்ளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :........................................ ........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற, ........................................... ஆம் இலக்க தேசிய அடையாள அட்டையைக் கொண்டுள்ள திரு./திருமதி/செல்வி ...................................................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், இன்றைய தினம் அவர் என் முன்னிலையில் இதில் கையொப்பமிட்டார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

...............................

சான்றுபடுத்தும் அலுவலரின் கையொப்பம்

சான்றுபடுத்தும் அலுவலரின் பெயர் :...................

பதவி:........................

முகவரி:.......................

03-633

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க தகவல் திணைக்களம்

## இணையத்தள எழுத்தாளர் (முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத - பல்நோக்கு வகுதி 1 சேவை வகை MN 2-2025) ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோருதல்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள மேற்குறித்த பதவிக்கு நல்ல ஆரோக்கியம் மற்றும் சிறந்த நடத்தையுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், கல்வி மற்றும் தொழில் தகைமை சான்றிதழ்களின் பிரதிகளுடன், 2026, ஏப்பிறல் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், 163, கிருலப்பன அவனியூ, கொழும்பு 05" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். (இவ் அறிவித்தலை www.governmentinformation.lk எனும் இணையதளம் ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.)

**இணையத்தள எழுத்தாளர் பதவி : வெற்றிடங்களின் எண்ணிக்கை 06 (சிங்கள மொழி 01, தமிழ் மொழி 02, ஆங்கில மொழி 03)**

1. **சம்பள அளவுத்திட்டம்**:

   2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN 02-2025 சம்பளக் குறியீடு இப்பதவிக்கு உரிமையுடையது என்பதுடன், குறித்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 48,470.00 - 10 × 540 - 11 × 630 – 10 × 1,010 - 10 × 1,190 - ரூபா 82,800.00 ஆகும் என்பதுடன், 2027.01.01 ஆந் திகதி தொடக்கம் அந்த சம்பளத்திற்கு நீங்கள் உரித்துடையவர் ஆவீர்கள். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை III ஏற்பாடுகளுக்கு அமைய நியமன திகதியில் இருந்து உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

2. **வயது எல்லை :**

   விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்டாமலும் இருக்க வேண்டும்.

3. **கல்வித் தகைமை :**

   சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொது தராதர சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல்.

   மற்றும்

   கல்விப் பொது தராதர சான்றிதழ் (உயர் தர) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் (பொது அறிவு பரீட்சை தவிர ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்)

4. **தொழில் தகைமை :**

   மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது தகவல் தொழில்நுட்பத் துறையில் அதற்கு கூடிய தகைமை பெற்றிருத்தல்.

5. **அனுபவம்** : பொருந்தாது.

6. **உடல் தகைமை :**

   அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருக்க வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை :**

   எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம். (நேர்முக பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

8. **பரீட்சை நடைமுறை :**

   அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனத்தால் பரீட்சை நடாத்தப்படும். இந்த பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். ஒரு விண்ணப்பதாரி தனக்குப் பொருத்தமான மொழியைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்கு உரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் குறித்த மொழியிலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| *வினாத் தாள்* | *நேரம்* | *மொத்த புள்ளிகள்* | *சித்தியடைய தேவையான புள்ளிகள்* |
|---|---|---|---|
| சமூக ஊடகம் மற்றும் இதழியல் | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழி ஆற்றல் மற்றும் இதழியல் | 02 ½ மணித்தியாலம் | 100 | 40 |

**பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *வினாத்தாள் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| சமூக ஊடகம் மற்றும் இதழியல் | செய்தி எழுதுதல்<br>நேரடி நிகழ்நிலை செய்தி எழுதுதல்<br>இணையதளத்தில் செய்திகளை வெளியிடுதல்<br>சமூக ஊடகம் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நுட்பங்கள்<br>பத்திரிகை கலந்துரையாடல்கள் மற்றும் செய்தி தொகுப்பு<br>புகைப்படம் மற்றும் இணையத்தள தொடர்பாடல் |
| மொழி ஆற்றல் மற்றும் இதழியல் | பத்திரிகை மொழி<br>செய்தியாக்கம்<br>மொழி மற்றும் செய்தித் தலைப்பு<br>மொழி மற்றும் புகைப்படம்<br>விஷேட ஆக்கங்கள் மற்றும் அறிக்கை மொழி<br>படைப்பாக்க மொழி |

9. **சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

I. இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்கு உரித்துடையது. விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு நீங்கள் பங்களிப்பு செய்ய வேண்டும். அரசினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் முறையில் நீங்கள் பங்களிப்பு பணத்தை செலுத்த வேண்டும்.

II. இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

III. 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு அமைய, உரிய ஏனைய அரசகரும மொழியில் / அரசகரும மொழிகளில் திறமையை பூர்த்தி செய்ய வேண்டும்.

IV. 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப் பிரமாணங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய உத்தரவுகளுக்கும் இந்த நியமனம், உட்பட்டதாகும்.

V. விண்ணப்பிக்கப்பட்ட மொழி மூலம் பின்னர் மாற்ற இடமளிக்கப்படாது என்பதுடன், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியான மொழி மூலமாக இருக்கும்.

10. **பதவிக்கு உரிய கடமைகள்:**

I. பாராளுமன்றம் / அமைச்சு / அரச நிறுவனங்கள் / மாவட்டச் செயலகத்தின் ஊடகச் செய்தி சேகரிப்புகளில் பங்குபற்றுதல் மற்றும் நாளாந்த செய்திகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்.

II. அரசின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழியில்) பதிவேற்றம் செய்தல்.

III. பணிப்பாளர் (விஷேட ஊடக அலகு) மற்றும் இணையதள ஆசிரியரால் உரித்தளிக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுதல்.

IV. அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய பதவிநிலை அலுவலர்களால் உரித்தளிக்கப்படும் கடமைகளைச் நிறை வேற்றுதல்.

11. விண்ணப்பதாரிகள் சான்றுபடுத்தக்கப்பட்ட பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன், கோரப்படும் போது மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்
II. கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள்
III. தொழில் தகைமைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள்

12. அரசாங்க / மாகாண பொதுச் சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

13. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவ தொரு விடயம் தவறானது என தெரிவு செய்யப்பட முன்னர் கண்டறியப்பட்டால், விண்ணப்பதாரியை தகைமையற்றவராக பெயரிடுவதற்கும், நியமனத்துக்கு பின்னர் கண்டறியப்பட்டால், பதவி நீக்கம் செய்யவும் ஏதுவாகலாம்.

14. விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பப்படாத (தற்போது அரசாங்க / மாகாண பொதுச் சேவையில் பணியாற்றினால்) அல்லது மாதிரிப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

15. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

தற்போது அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரி ஒருவரின் கையொப்பத்தை நிறுவன தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பம் அவற்றை உறுதிப்படுத்த அதிகாரம் வழங்கப் பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறானவர்கள் சமாதான நீதவான், வழக்கறிஞர், நொத்தாரிஸ் அரசாங்க பாடசாலைகளின் அதிபர்கள், 782,808.00 ரூபாவிற்கு அதிகமாக வருடாந்த சம்பளத்தினை பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லது விகாரைகளின் தலைமை பிக்கு அல்லது ஏனைய சமய மதஸ்தலங்களின் பொறுப்பான மதகுருமார்கள் ஒருவரால் உறுதிப்படுத்த வேண்டும்.

16. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தம் போது அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் பெயரில் மக்கள் வங்கியின் நாரஹென்பிட்டி கிளையில் 119100109026220 என்ற கணக்கு இலக்கத்துக்கு வரவு வைத்து, குறித்த பற்றுச்சீட்டை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்படிவத்தில் அதற்குரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும்.

II. அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஊடாக எழுத்துப் பரீட்சை 2026 மே மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

III. வர்த்தமானியில்குறிப்பிடப்பட்டுள்ளதகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஊடாக பரீட்சை அனுமதி அட்டை பதிவுத் தபாலில் அனுப்பப்படும்.

IV. பரீட்சை அனுமதி அட்டையில் விண்ணப்பதாரி யின் கையொப்பம் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

17. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மும்மொழியிலும் பிரசுரிக்கப்படுகின்ற இவ்வர்த்தமானிகளில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின் சிங்கள மொழியே மேலோங்கி காணப்படும்.

எச்.எஸ்.கே.ஜே. பண்டார,
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
163, கிருலப்பன மாவத்தை,
கொழும்பு 05,
2026, மாச்சு 10.

**அரசாங்க தகவல் திணைக்களம்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இணையத்தள எழுத்தாளர்**

விண்ணப்பிக்கும்மொழி

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

01. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :
.................................................................................................................................................
.................................................................................................................................................

(ஆ) முதல் எழுத்துக்களின் பெயர்கள் (தமிழில்) :
.................................................................................................................................................
.................................................................................................................................................

(இ) முழுப்பெயர் (ஆங்கிலத்தில் கப்பிட்டல் எழுத்துக்களில்) : (Mr./Mrs./Miss)
.................................................................................................................................................
.................................................................................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

03. (அ) பிரத்தியேக முகவரி :
.................................................................................................................................................
.................................................................................................................................................

தொலைபேசி இல. : | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி (தற்போது தொழிலில் இருப்பின்) :
.................................................................................................................................................
.................................................................................................................................................

தொலைபேசி இல. : | | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :

பிரத்தியேக ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்ததிகதி : வருடம் ............ மாதம் ................ திகதி .............

(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைத்து அனுப்பப்பட வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் ............ மாதங்கள் ................ நாட்கள் .............

05. குடியியல் நிலை : திருமணமானவர் / திருமணமாகாதவர்

06. பால் : பெண் / ஆண்

07. இலங்கைப் பிரசையா : ஆம் / இல்லை

08. கல்வித் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

க.பொ.த. (உ./த.) பரீட்சை : ஆண்டு ......................... பரீட்சை சுட்டெண் :....................................

| *பாடங்கள்* | *தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

க.பொ.த. (சா./த.) பரீட்சை : ஆண்டு .......................... பரீட்சை சுட்டெண் :.......................................

| *பாடங்கள்* | *தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

09. தொழில் தகைமைகள் : (சான்றுபடுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

| *பாடநெறிகள்* | *நிறுவனம்* | *செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. வேறு தகைமைகள் : (சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

| *நிறுவனம்* | *தகைமைகள்* | *செல்லுபடியாகும் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. தற்போதைய தொழில் தொடர்பான விபரம் (தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும்) :

(அ) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ......................................................................................
(ஆ) முதல் நியமன திகதி : ..........................................................................................................
(இ) தற்போது வகிக்கும் பதவி : .................................................................................................
(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்: ...............................................................................................
(உ) கொடுப்பனவுகள்: ...................................................................................................................
(ஊ) மொத்த சம்பளம்: ...................................................................................................................

12. ஏதாவது குற்றவியல் செயலுக்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம் / இல்லை ஆம் எனில், தயவுசெய்து விவரங்களை வழங்கவும். ....................................................................

13. நீங்கள் முன்னர் அரசின் கீழ் பணியாற்றியிருக்கிறீர்களா? ஆம் / இல்லை ஆம் எனில், தயவுசெய்து விவரங்களை வழங்கவும். ..................................................................

14. பரீட்சை கட்டணத்தினை செலுத்திய வங்கி ............................... கிளை .......................

| பரீட்சை கட்டணத்தினை செலுத்திய பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். |
|---|

விண்ணப்பதாரியின் உறுதியுரை

இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன். இங்கு வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் பொய்யானது அல்லது தவறானது என தெரிவுசெய்ய முன்னர் கண்டறியப்பட்டால், இந்த பதவிக்குத் தகுதி நீக்கம் செய்யப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால், இழப்பீடு இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஏதுவாகும் எனவும் அறிவேன்.

திகதி : ..............................................  ....................................................
கையொப்பம்

---

விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்: இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................ ........................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ..............................திகதி என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

முழுப் பெயர் : ............................................

பதவி : ................................................

திகதி : ................................................

(பதவி நிலை முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் விதந்துரை**

(அரசாங்க நிறுவனங்கள் / மாகாண பொது சேவை / நியதிச் சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில் ...................................................... பதவி வகிக்கும் திரு. / திருமதி / செல்வி ........................... ..................................... அவர்களது விண்ணப்பத்தை விதந்துரை செய்து சமர்ப்பிக்கிறேன். அவர் இந்தப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அவரது பணி மற்றும் நடத்தை திருப்திகரமாக உள்ளது எனவும், அவருக்கு எதிராக எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கையும் இல்லை எனவும், அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க எதிரபார்க்கவில்லை எனவும் சான்றளிக்கிறேன். அவர் இந்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கலாம் / விடுவிக்க இயலாது. (தயவுசெய்து தேவையற்ற சொற்களை நீக்கவும்.)

திகதி : .............................................

....................................................
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

03-406

---

**அரசாங்க தகவல் திணைக்களம்**

**தொழில்நுட்ப சேவை வகுதியின் தொழில்நுட்ப அலுவலர் (III) (மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்). பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோருதல் - திறந்த போட்டிப்பரீட்சை**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெற்றிடமாவுள்ள மேற்குறித்த பதவிக்கு நல்ல ஆரோக்கியம் மற்றும் சிறந்த நடத்தையுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், கல்வி மற்றும் தொழில் தகைமை சான்றிதழ்களின் பிரதிகளுடன், 2026 ஏப்பிறல் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், 163, கிருலப்பன மாவத்தை, கொழும்பு 05" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். (இவ் விளம்பரத்தை www.governmentinformation.lk எனும் இணையத்தளம் ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.)

தொழில்நுட்ப அலுவலர் (III) பதவி – வெற்றிடங்களின் எண்ணிக்கை 02

1. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN 03-2025 சம்பளக் குறியீட்டின் கீழான ரூபா 52,250.00 - 10 × 800 - 11 × 1,190 - 10 × 1,320 - 10 × 1,350 - ரூபா 100,040.00 இப் பதவிக்கு உரிமையுடையது என்பதுடன், குறித்த சம்பள அளவுத்திட்டம் 2027.01.01 ஆந் திகதி தொடக்கம் உங்களுக்கு உரித்தாகும். நியமனம் அமுலுக்கு வரும் திகதி தொடக்கம் இச் சுற்றறிக்கையின் அட்டவணை III ஏற்பாடுகளுக்கு அமைய உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

2. **வயது எல்லை :**

விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

3. **கல்வித் தகைமை :**

I. சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொது தராதர சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல்.

மற்றும்

II. கல்விப் பொது தராதர சான்றிதழ் (உயர் தர) பரீட்சையில் பௌதீகவியல் / இரசாயனவியல் அடங்கலாக மூன்று பாடங்களில் கல்விப் பொது தராதர சான்றிதழ் (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல்.

4. **தொழில் தகைமை** :

மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா,

அல்லது

தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் வழங்கப்படும் பொறியியல் தேசிய டிப்ளோமா,

அல்லது

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா,

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா,

அல்லது

இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் பகுதி I வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

தொழில் துறை தொடர்பான தேசிய தொழில் திறன் (NVQ) 6 மட்ட தகைமையை பூர்த்தி செய்திருத்தல். (இதன்போது தொழில் துறை என்பது அரசாங்க திரைப்பட பிரிவின் வீடியோ படப்பிடிப்பு, படத்தொகுப்பு, ஒலி தொழில்நுட்பம், ஆய்வுகூட செயற்பாடுகள் மோட்டார் வாகன பராமரிப்பு, மின்சார உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் பராமரிப்பு ஆகியவை அடங்கும்)

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களிடம் உசாவி கருத்து பெறப்பட்ட பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகைகளிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பிற தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்.

5. **அனுபவம்** : பொருந்தாது.

6. **உடல் தகைமை** :

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருக்க வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள் :**

I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. நல்ல நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் மேற்குறித்த தகைமைகள் அனைத்து வகைகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

8. **ஆட்சேர்ப்பு முறை** :

எழுத்துப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். நேர்முக பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. **பரீட்சை நடைமுறை:**

இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். ஒரு விண்ணப்பதாரி தனக்குப் பொருத்தமான மொழியைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்கு உரிய அனைத்து வினாத் தாள்களுக்கும் குறித்த மொழியிலே விடை யளிக்க வேண்டும். விண்ணப்பம் செய்யப்பட்ட மொழியை பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| *பாடம்* | *நேரம்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| உளச்சார்பு பரீட்சை | ஒரு மணித்தியாலம் | 100 | 40 |
| பொது பரீட்சை (தொழில்நுட்பம் மற்றும் விடய அறிவு சார்ந்த பரீட்சை) | ஒரு மணித்தியாலம் | 100 | 40 |

**பரீட்சைக்கான பாட விதானங்கள் :**

| *வினாத்தாள் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| உளச்சார்பு பரீட்சை | விண்ணப்பதாரியின் சிந்தனை தர்க்க ரீதியான திறன்கள், சிந்திக்கும் பகுப்பாய்வு நிலமைகள், தீர்மானம் மேற்கொள்ளும் பலத்தை தீர்மானிப்பதற்கான பல்தேர்வு வினாக்களை கொண்டுள்ள வினாத் தாள். |
| பொதுப் பரீட்சை (தொழில்நுட்பம் மற்றும் விடய அறிவு சார்ந்த பரீட்சை) | பதவிக்குரிய பல்தேர்வு தன்மையிலான வினாக்கள் மற்றும் தெரிவு செய்து பதிலளிக்கும் வகையிலான கட்டமைக்கப்பட்ட தன்மையிலான வினாக்களை கொண்டிருக்கும். |

10. **சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

I. இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையதுமாகும். என்பதுடன் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு நீங்கள் பங்களிப்பு செய்ய வேண்டும். அரசினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் முறையில் நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்த வேண்டும்.

II. இவ் நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

III. 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு அமைய, உரிய ஏனைய அரசகரும மொழியில் / அரசகரும மொழிகளில் திறமையை பூர்த்தி செய்ய வேண்டும்.

IV. 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதி பிரமாணங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய உத்தரவுகளுக்கும் இந்த நியமனம், உட்பட்டதாகும்.

V. பரீட்சைக்கென விண்ணப்பிக்கப்பட்ட மொழிமூலம் பின்னர் மாற்ற இடமளிக்கப்படாது என்பதுடன், விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியான மொழிமூலமாக இருக்கும்.

11. **பதவிக்கு உரிய கடமைகள்** :

திணைக்களத்தின் கட்டிடங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்பான கருமங்களை நிறைவேற்றுதல்.

12. விண்ணப்பதாரிகள் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன், கோரப்படும் போது மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்
II. கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள்
III. தொழில் தகைமைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள்

13. அரசாங்க / மாகாண பொதுச் சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

14. விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் தவறானது என தெரிவு செய்யப்பட முன்னர் கண்டறியப்பட்டால், விண்பதாரியை தகைமையற்றவராக பெயரிடுவதற்கும், நியமனத்துக்கு பின்னர் கண்டறியப்பட்டால், பதவி நீக்கம் செய்ய ஏதுவாகலாம்.

15. விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பப்படாத

(தற்போது அரசாங்க /மாகாண பொதுச் சேவையில் பணியாற்றினால்) அல்லது மாதிரி படிவத்துக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

16. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

தற்போது அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரி ஒருவரின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பம் அவற்றை உறுதிப்படுத்த அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறானவர்கள் சமாதான நீதவான், வழக்கறிஞர், நொத்தாரிஸ் அரச பாடசாலைகளின் அதிபர்கள், 782,808.00 ரூபாவிற்கு அதிகமாக வருடாந்த சம்பளத்தினை பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லது விகாரைகளின் தலைமை பிக்கு அல்லது ஏனைய சமய மதஸ்தலங்களின் பொறுப்பான மதகுருமார்கள் ஒருவரால் உறுதிப்படுத்த வேண்டும்.

17. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் பெயரில் மக்கள் வங்கியின் நாரஹென்பிட்டி கிளையில் 119100109026220 கணக்கு இலக்கத்துக்கு வரவு வைத்து, குறித்த பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

II. அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஊடாக எழுத்துப் பரீட்சை 2026 மாச்சு மாதம் கொழும்பில் நடத்தப்படும்.

III. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஊடாக பரீட்சை அனுமதி அட்டை பதிவுத் தபாலில் அனுப்பப்படும்.

IV. பரீட்சை அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் பிரசுரிக்கப்படுகின்ற இவ்வர்த்தமானிகளில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின் சிங்கள மொழியே மேலோங்கி காணப்படும்.

எச்.எஸ்.கே.ஜே. பண்டார,
பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
163, கிருலப்பன மாவத்தை,
கொழும்பு 05,
2026, மாச்சு 10.

**அரசாங்க தகவல் திணைக்களம்**

**தொழில்நுட்ப அலுவலர் III - திறந்த அடிப்படை**

மாதிரி விண்ணப்பப்படிவம்

விண்ணப்பிக்கும்மொழி

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

01. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :
..........................................................................................................................................
..........................................................................................................................................

(ஆ) முதல் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தமிழில்) :
..........................................................................................................................................
..........................................................................................................................................

(இ) முழுப்பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில்) : (Mr./Mrs./Miss)
........................................................................................................................................................
........................................................................................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | |

03. (அ) பிரத்தியேக முகவரி :
........................................................................................................................................................
........................................................................................................................................................

தொலைபேசி இல. : | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி (தற்போது தொழிலில் இருப்பின்) :
........................................................................................................................................................
........................................................................................................................................................

தொலைபேசி இல. : | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :

பிரத்தியேக ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி : ஆண்டு ............ மாதம் ................ திகதி .............

(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைத்து அனுப்பப்பட வேண்டும்.)

(ஆ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் ............ மாதங்கள் ................ நாட்கள் .............

05. குடியியல் நிலை : திருமணமானவர் / திருமணமாகாதவர்

06. பால் : பெண் / ஆண்

07. இலங்கை பிரசையா : ஆம் / இல்லை

08. கல்வித் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

க.பொ.த (உ./த.) பரீட்சை : ஆண்டு ......................... பரீட்சை சுட்டெண் :....................................

| *பாடங்கள்* | *தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

க.பொ.த. (சா./த.) பரீட்சை : ஆண்டு .......................... பரீட்சை சுட்டெண் :.......................................

| *பாடங்கள்* | *தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

09. தொழில் தகைமைகள் : (சான்றுபடுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

| *பாடநெறிகள்* | *நிறுவனம்* | *செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. வேறு தகைமைகள் : (சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

| *நிறுவனம்* | *தகைமைகள்* | *செல்லுபடியாகும் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. தற்போதைய தொழில் தொடர்பான விபரம் (தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும்) :

(அ) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி : ..........................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................................

12. ஏதாவது குற்றவியல் செயலுக்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம் / இல்லை. ஆம் எனில், தயவுசெய்து விவரங்களை வழங்கவும். ..........................................................................................................

13. நீங்கள் முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியிருக்கிறீர்களா? ஆம் / இல்லை.
ஆம் எனில், தயவுசெய்து விவரங்களை வழங்கவும். ..........................................................................................................

14. பரீட்சை கட்டணத்தினை செலுத்திய வங்கி .............................. கிளை ..........................................................................

| |
|---|
| பரீட்சை கட்டணத்தினை செலுத்திய பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். |

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை

இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன். இங்கு வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் பொய்யானது அல்லது தவறானது என தெரிவு செய்ய முன்னர் கண்டறியப்பட்டால், இந்த பதவிக்குத் தகுதி நீக்கம் செய்யப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால், இழப்பீடு இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஏதுவாகும் எனவும் அறிவேன்.

திகதி : ............................................... ....................................................

கையொப்பம்

---

விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்: இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................ ........................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ..............................திகதி என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

முழுப் பெயர் : ............................................

பதவி : ................................................

திகதி : ................................................

(பதவி நிலை முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் விதந்துரை**

(அரசாங்க நிறுவனங்கள் / மாகாண பொதுச் சேவை / நியதிச் சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில் ....................................................... பதவி வகிக்கும் திரு. / திருமதி / செல்வி ............................ ..................................... அவர்களது விண்ணப்பத்தை விதந்துரை செய்து சமர்ப்பிக்கிறேன். அவர் இந்தப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அவரது பணி மற்றும் நடத்தை திருப்திகரமாக உள்ளது எனவும், அவருக்கு எதிராக எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கையும் இல்லை எனவும், அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க எதிரபார்க்கவில்லை எனவும் சான்றளிக்கிறேன். அவர் இந்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கலாம் / விடுவிக்க இயலாது. (தயவுசெய்து தேவையற்ற சொற்களை நீக்கவும்.)

திகதி : ............................................... .....................................................

திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

(உத்தியோகபூர்வ முத்திரை)

03-407/ 1

## அரசாங்க தகவல் திணைக்களம்

## புகைப்பட கலைஞர் (III) (மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்) - பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோருதல் - திறந்த போட்டிப் பரீட்சை

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெற்றிடமாவுள்ள மேற்குறித்த பதவிக்கு நல்ல ஆரோக்கியம் மற்றும் சிறந்த நடத்தையுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவங்கள், கல்வி மற்றும் தொழில் தகைமை சான்றிதழ்களின் பிரதிகளுடன், 2026 ஏப்பிறல் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், 163, கிருலப்பன எவனியு, கொழும்பு 05" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். (இவ் விளம்பரத்தை www.governmentinformation.lk எனும் இணையதளம் ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.)

புகைப்பட கலைஞர் (III) பதவி – வெற்றிடங்களின் எண்ணிக்கை 06

1. **சம்பள அளவுத்திட்டம்** :

   2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN 03-2025 சம்பளக் குறியீட்டின் கீழான ரூபா 52,250.00 - 10 × 800 - 11 × 1,190 - 10 × 1,320 - 10 × 1,350 - ரூபா 100,040.00 இப் பதவிக்கு உரித்துடையது. என்பதுடன், குறித்த சம்பள அளவுத்திட்டம் 2027.01.01 ஆந் திகதி தொடக்கம் உங்களுக்கு உரித்தாகும். நியமனம் அமுலுக்கு வரும் திகதி தொடக்கம் இச் சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளுக்கு அமைய உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

2. **வயது எல்லை** :

   விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

3. **கல்வித் தகைமை :**

   I. சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொது தராதர சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல்.

   மற்றும்

   II. பௌதீகவியல்/ இரசாயனவியல் அடங்கலாக மூன்று பாடங்களில் கல்விப் பொது தராதர சான்றிதழ் (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல்.

   குறிப்பு : இத் தொழில் தகைமை தொழிற்துறை தொடர்பான தேசிய தொழில் திறன் மட்டம் (NVQ) 6 ஆக இருத்தல் வேண்டும்.

4. **தொழில் தகைமை :**

   மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் ஒரு ஆண்டுக்கு குறையாத, அசையா புகைப்படம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல்.

5. **அனுபவம்** :

   தொடர்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

6. **உடல் தகைமை** :

   அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருக்க வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

   I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

   II. நல்ல நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

   III. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் மேற்குறித்த தகைமைகள் அனைத்து வகைகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

8. **ஆட்சேர்ப்பு முறை** :

   எழுத்துப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். நேர்முக பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. **பரீட்சை நடைமுறை** :

   இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படும். ஒரு விண்ணப்பதாரி தனக்குப் பொருத்தமான மொழியைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்கு உரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் குறித்த மொழியிலே விடையளிக்க

வேண்டும். விண்ணப்பம் செய்யப்பட்ட மொழியை பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| *பாடம்* | *நேரம்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| உளச்சார்பு பரீட்சை | ஒரு மணித்தியாலம் | 100 | 40 |
| பொது பரீட்சை (தொழில்நுட்பம் மற்றும் விடய அறிவு சார்ந்த பரீட்சை) | ஒரு மணித்தியாலம் | 100 | 40 |

**பரீட்சைக்கான பாட விதானங்கள் :**

| *வினாத்தாள் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| உளச்சார்பு பரீட்சை | விண்ணப்பதாரியின் சிந்தனை தர்க்க ரீதியான திறன்கள், சிந்திக்கும் பகுப்பாய்வு நிலைமைகள், தீர்மானம் மேற்கொள்ளும் பலத்தை தீர்மானிப்பதற்கான பல்தேர்வு வினாக்களை கொண்டுள்ள வினாத்தாள். |
| பொது பரீட்சை (தொழில்நுட்பம் மற்றும் விடய அறிவு சார்ந்த பரீட்சை) | பதவிக்குரிய பல்தேர்வு தன்மையிலான வினாக்கள் மற்றும் தெரிவு செய்து பதிலளிக்கும் வகையிலான கட்டமைக்கப்பட்ட தன்மையிலான வினாக்களை கொண்டிருக்கும். |

10. **சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

   I. இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு நீங்கள் பங்களிப்பு செய்ய வேண்டும். அரசினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் முறையில் நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்த வேண்டும்.

   II. இந் நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

   III. 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு அமைய, உரிய ஏனைய அரசகரும மொழியில் / அரசகரும மொழிகளில் திறமையை பூர்த்தி செய்ய வேண்டும்.

   IV. 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதி பிரமாணங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய உத்தரவுகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

   V. விண்ணப்பிக்கப்பட்ட மொழி மூலம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்ற இடமளிக்கப்படாது என்பதுடன், விண்ணப்பபடிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியான மொழி மூலமாக இருக்கும்.

11. பதவிக்கு உரிய கடமைகள் :- திணைக்களத்தின் அசையா புகைப்படம் தொடர்பான கருமங்களை நிறைவேற்றுதல்.

12. விண்ணப்பதாரிகள் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன், கோரப்படும் போது மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

   I. பிறப்புச் சான்றிதழ்
   II. கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள்
   III. தொழில் தகைமைகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள்

13. அரசாங்க / மாகாண பொதுச் சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

14. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் தவறானது என தெரிவு செய்யப்பட முன்னர் கண்டறியப்பட்டால், விண்ணப்பதாரியை தகைமையற்றவராக பெயரிடுவதற்கும், நியமனத்துக்கு பின்னர் கண்டறியப்பட்டால், பதவி நீக்கம் செய்ய ஏதுவாகலாம்.

15. விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பப்படாத (தற்போது அரசாங்க / மாகாண பொதுச் சேவையில் பணியாற்றினால்) அல்லது மாதிரிப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

16. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

தற்போது அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரி ஒருவரின் கையொப்பத்தை நிறுவன தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பம் அவற்றை உறுதிப்படுத்த அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறானவர்கள் சமாதான நீதவான், வழக்கறிஞர், நொத்தாரிஸ் அரசாங்க பாடசாலைகளின் அதிபர்கள், 782,808.00 ரூபாவிற்கு அதிகமாக வருடாந்த சம்பளத்தினை பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லது விகாரைகளின் தலைமை பிக்கு அல்லது ஏனைய சமய மதஸ்தலங்களின் பொறுப்பான மதகுருமார்கள் ஒருவரால் உறுதிப்படுத்த வேண்டும்.

17. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் பெயரில் மக்கள் வங்கியின் நாரஹென்பிட்டி கிளையில் 119100109026220 என்ற கணக்கு இலக்கத்துக்கு வரவு வைத்து, குறித்த பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

II. அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஊடாக எழுத்துப் பரீட்சை 2026 மே மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

III. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஊடாக பரீட்சை அனுமதி அட்டை பதிவுத் தபாலில் அனுப்பப்படும்.

IV. பரீட்சை அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மும்மொழியிலும் பிரசுரிக்கப்படுகின்ற இவ்வர்த்தமானிகளில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின் சிங்கள மொழியே மேலோங்கி காணப்படும்.

எச்.எஸ்.கே.ஜே. பண்டார,
பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
163, கிருலப்பன மாவத்தை, கொழும்பு 05,
2026, மாச்சு 10.

**அரசாங்க தகவல் திணைக்களம்**

**புகைப்பட கலைஞர் (III) - திறந்த அடிப்படை**

மாதிரி விண்ணப்பப்படிவம்

விண்ணப்பிக்கும் மொழி

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

01. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :
.....................................................................................................................................
.....................................................................................................................................

(ஆ) முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) :
.....................................................................................................................................
.....................................................................................................................................

(இ) முழுப்பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில்) : (Mr./Mrs./Miss)
.....................................................................................................................................
.....................................................................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

03. (அ) பிரத்தியேக முகவரி :
.....................................................................................................................................
.....................................................................................................................................

தொலைபேசி இல. : | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி (தற்போது தொழிலில் இருப்பின்) :
.....................................................................................................................................
.....................................................................................................................................

தொலைபேசி இல. : | | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :

அலுவலக ☐ பிரத்தியேக ☐

04. (அ) பிறந்த திகதி : வருடம் ............. மாதம் ................ திகதி .............

(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைத்து அனுப்பப்பட வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் ............. மாதங்கள் ................ நாட்கள் .............

05. குடியியல் நிலை : திருமணமானவர் / திருமணமாகாதவர்

06. பால் : பெண் / ஆண்

07. இலங்கைப் பிரசையா : ஆம் / இல்லை

08. கல்வித் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

க.பொ.த. (உ./த.) பரீட்சை : ஆண்டு:.......................... பரீட்சை சுட்டெண் :.....................................

| *பாடங்கள்* | *தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

க.பொ.த. (சா./த.) பரீட்சை : ஆண்டு: .......................... பரீட்சை சுட்டெண் :.......................................

| *பாடங்கள்* | *தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

09. தொழில் தகைமைகள் : (சான்றுபடுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

| *பாடநெறிகள்* | *நிறுவனம்* | *செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. வேறு தகைமைகள் : (சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

| *நிறுவனம்* | *தகைமைகள்* | *செல்லுபடியாகும் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. தற்போதைய தொழில் தொடர்பான விபரம் (தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும்) :

(அ) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ....................................................................................
(ஆ) முதல் நியமன திகதி : ..........................................................................................................
(இ) தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................

12. ஏதாவது குற்றவியல் செயலுக்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம் / இல்லை. ஆம் எனில், தயவுசெய்து விவரங்களை வழங்கவும். ....................................................................

13. நீங்கள் முன்னர் அரசின் கீழ் பணியாற்றியிருக்கிறீர்களா? ஆம் / இல்லை.
ஆம் எனில், தயவுசெய்து விவரங்களை வழங்கவும். ...................................................................

14. பரீட்சை கட்டணத்தினை செலுத்திய வங்கி ................................ கிளை ........................

| பரீட்சை கட்டணத்தினை செலுத்திய பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். |
|---|

15. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன். இங்கு வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் பொய்யானது அல்லது தவறானது என தெரிவு செய்ய முன்னர் கண்டறியப்பட்டால், இந்த பதவிக்குத் தகுதி நீக்கம் செய்யப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால், இழப்பீடு இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஏதுவாகும் எனவும் அறிவேன்.

திகதி : ..............................................                                        ....................................................

கையொப்பம்

---

16. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்: இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................ ........................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ..............................திகதி என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...........................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

முழுப் பெயர் : ............................................

பதவி : ................................................

திகதி : ...............................................

(பதவி நிலை முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் விதந்துரை**

(அரச நிறுவனங்கள் / மாகாண பொது சேவை / நியதிச் சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில் ....................................................... பதவி வகிக்கும் திரு. / செல்வி / செல்வி ............................ ..................................... அவர்களது விண்ணப்பத்தை விதந்துரை செய்து சமர்ப்பிக்கிறேன். அவர் இந்தப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அவரது பணி மற்றும் நடத்தை திருப்திகரமாக உள்ளது எனவும், அவருக்கு எதிராக எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கையும் இல்லை எனவும், அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கவில்லை எனவும் சான்றளிக்கிறேன். அவர் இந்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கலாம் / விடுவிக்க இயலாது. (தயவுசெய்து தேவையற்ற சொற்களை நீக்கவும்.)

திகதி : ..............................................                                        .....................................................

திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

(உத்தியோகபூர்வ முத்திரை)

03-407/ 2

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபவிருத்தி அமைச்சு

## இலங்கை விலை மதிப்பீட்டுத் திணைக்களம்

## இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் கள/ அலுவலக உத்தியோகத்தர் பிரிவுகள் 02 இல் II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தின் உதவி விலைமதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025 (2026)

அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தின் உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு 99 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2026, யூலை மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

* விண்ணப்பங்கள் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" இல் வெளியிடப்படும் என்பதுடன், விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறையின் கீழ் (Online) மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். நிகழ் நிலையிலான விண்ணப்பங்கள் 2026 மாச்சு 23 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, 2026 ஏப்பிறல் 23 ஆம் திகதி மு.ப. 09.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

* தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவை அலுவலர்களாகப் பதவி வகிப்போர் தமது விண்ணப்பத்தின் பிரதியைத் தமது தனியாள் கோவையில் இடுவதற்காக தமது நிறுவனத் தலை வரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும்போது நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்ட அவ்விண்ணப்பத்தின் இன்னொரு பிரதியும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமும் முன்னளிக் கப்பட வேண்டும்.

* இறுதி திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிப் பதில் தாமதம் ஏற்படுவதால் ஏற்படும் பாதகமான சூழ்நிலைகளை விண்ணப்பதாரர் ஏற்க வேண்டும்.

பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ தலைமை விலைமதிப்பீட்டாளருக்கு உரிமை உண்டு.

பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்:**

I. **கல்வித் தகைமை:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, சொத்து முகாமைத்துவ மற்றும் விலை மதிப்பீடு பற்றிய விஞ்ஞான விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது ஐக்கிய இராச்சிய பட்டய நில அளவையாளர்களது ரோயல் நிறுவனத்தின் உறுப்பாண்மையுடனான பட்டய விலைமதிப்பீட்டாளராக இருத்தல்.

II. **உடற் தகைமைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கும் தேவையான உடற்தகைமையையும் உளத் தகைமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

III. **மற்றைய தகைமைகள்:**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிகள், உரிய எல்லாத் தகைமைகளையும் 2026, பெப்புருவரி 28 ஆம் திகதியன்று முழுமையாகப் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு நியமிக்கப்படுவதற்கான போட்டிப் பரீட் சையில் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகைளைக் கொண்டுள்ளவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

02. **வயது:**

I குறைந்த வயது : 21 வருடங்களுக்குக் குறை யாதிருத்தல்.

II ஆகக்கூடிய வயது : 35 வருடங்களுக்குக் மேற்படா திருத்தல்.

(அதன்படி 2005.02.28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.02.28 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த தினத்தைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பிப்பதற்குத் தகைமையுடையோராவர்)

குறிப்பு:

I. ஏதேனும் மதப் பிரிவிலும் மதகுருவாக உள்ள எவரும் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

II. பட்டதாரியாக வருவதற்கான பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் எவரும் இப்பரீட்சையில் தோற்ற இயலாது. ஆயினும், மேலே தரப்பட்டுள்ள தகைமைகளை 2026.02.28 ஆம் திகதியன்று பூர்த்தி செய்துள்ளதாக உரிய பட்டத்தை வழங்கும் பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட கடிதமொன்றை முன்னளிக்கும் சந்தர்ப்பத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடம் வழங்கப்படும்.

03. **சேவை நிபந்தனைகள் :**

I சம்பளம் - இந்தப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன்படி, MN 5 ஐக் கொண்டுள்ள சம்பள அளவுத்திட்டம் ரூ. 58,660.00 -10 x 1,190 - 11 x 1,360 - 15 x 1,670 - ரூபா 110,570.00 ஆக இருக்கும்.

II இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் முன்வைக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானத்தின் கீழும் இருக்கும்.

III நியமிக்கப்படும் விண்ணப்பதாரி நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) மாதங்களுக்கு தகுதிகூர் காலத்துக்கு உட்படுதல் வேண்டும்.

IV நியமிக்கப்படுபவர் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தகுதியானவரா இல்லையா என்பதற்கான உடற்றகைமையைக் கொண்டுள்ளாரா என்பதைச் சோதிப்பதற்காக அரசாங்க வைத்திய அலுவலரொருவர் மூலம் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்குத் தோற்றுதல் வேண்டும்.

V நியமிக்கப்படுபவர் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்பட்டவராவார்.

VI அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2310/29 ஆம் இலக்க வர்த்தமானியில் தரப்பட்டுள்ள பணி நடைமுறை விதிகளில் உள்ள நிபந்தனைகளுக்கும், இந்த வர்த்தமானியின் I ஆவது பகுதியின் (IIஅ) பந்தியின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள, அரசாங்க சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

VII இந்தப் பதவியானது, 2142/75 ஆம் இலக்க, 2019.09.27 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள, இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவைக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள ஏற்பாடுகளின்படி கட்டுப்படுத்தப்படும்.

04. **ஆட்சேர்ப்பு முறை**:

எழுத்திலான பரீட்சையினதும், பொதுவானதொரு நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளினது மொத்தப் புள்ளிகளில் திறமை வரிசையின்படி, ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையினருக்குச் சமமானோர் பொதுவான நேர்முகப் பரீட்சையில் உள்ளடக்கப்பட்டு, தகைமையானோர் தேர்ந்தெடுக்கப்பவர் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகளேதும் வழங்கப்பட மாட்டாது. இதில் உரிய தகைமைகள் மாத்திரமே பரீட்சிக்கப்படும்.

05. **பரீட்சை நடைமுறை**:

ஆட்சேர்ப்புக்குரிய எழுத்திலான போட்டிப் பரீட்சைக்கு 02 வினாத்தாள்கள் உள்ளடக்கப்படும். அதுபற்றிய விபரங்கள் பின்வருமாறு :

| *பாட எண்* | *வினாத் தாளின் பெயர்* | *காலம்* | *சித்தியடைவதற்காகப் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | விடயத்திற்குரிய வினாத்தாள் பகுதி I | 30 நிமிடங்கள் | 40 | 100 |
| 02 | விடயத்திற்குரிய வினாத்தாள் பகுதி II | 1½ மணித்தியாலம் | 40 | 100 |

(அ) **விடயத்திற்குரிய வினாத்தாள் பகுதி I :**
சொத்து முகாமைத்துவமும் விலைமதிப்பீட்டு விஞ்ஞானமும் பற்றிய பட்டத்திற்கான பாடங்களுக்குரிய 25 இற்கு மேற்படாத பல்தேர்வு வினாக்களைக் கொண்டது.

(ஆ) விடயத்திற்குரிய வினாத்தாள் பகுதி II
சொத்து முகாமைத்துவமும் விலைமதிப்பீட்டு விஞ்ஞானமும் பற்றிய பட்டத்திற்கான பாடங்களுக்குரிய தலைப்புகள் உள்ளிட்டுத் தயாரிக்கப்படும் கட்டுரை ரீதியிலானதும் கட்டமைப்பு ரீதியிலானதுமான வினாக்களைக் கொண்டது.

குறிப்பு:

இந்தப் பரீட்சை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சைக்கு விண்ணப் பிக்கும் மொழி பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(I) விடைத்தாள் மதிப்பீட்டில் கையெழுத்து மற்றும் எழுத்துப்பிழை ஆகியவையும் கவனத்தில் கொள்ளப் படும்.

(II) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் களுக்கு பரீட்சை ஆணையர் நாயகம் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவார். எவ்வா றாயினும், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதானது, பரீட்சைக்குத் தேவை யான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாக கருதப்பட லாகாது.

(III) **விடைத்தாள் மதிப்பீட்டு முறை**: ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு, புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். அவர்களில் அதிக புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளிடையேயிருந்து வெற்றிடங் களின் எண்ணிக்கையின் விகிதாச்சாரத்தில் பரீட்சார்த்திகள் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

06. **தெரிவு செய்யப்படும் அடிப்படை:**

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த, மற்றும் நேர்முகப் பரீட்சையில் தகைமை பெற்ற விண்ணப்பதாரர், உரிய நியமனத்துக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யின்படி நியமிக்கப்படுவதற்குத் தெரிவுசெய்யப்படுவர்.

(I) **பெறுபேறுகளை வெளியிடுதல் :**

பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நியமன அதிகாரியால் பொருத்தமான திகதி அறியத் தரப்பட்டபின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலுமான புள்ளிகளை/ மொத்தப் புள்ளிகளைக் குறிப்பிடும் பெறுபேறுகள் பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளம் மூலம் வெளி யிடப்படுவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரது தீர்மானமே இறுதியானதாக இருக்கும்.

07. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும், விண்ணப்பிக்கும் இறுதித் திகதி யன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டியமை கட்டாயமானதாகும்.

08. **விண்ணப்பிக்கும் முறை:**

**மாதிரி விண்ணப்பம்:**

(1) பரீட்சைக்குரிய நிகழ்நிலையிலான (Online) விண்ணப்பம் ஆங்கில மொழியிலேயே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரியால் நிகழ்நிலையில் அனுப்பப்படும் மென் பிரதி செல்லுபடியானதென திணைக்களத்தால் ஏற்கப்பட்டதென / எற்கப்படவில்லையென, கணினி முறையில் உள்வருவதற்குப் பயன்படுத்தப்படும் கைத் தொலைபேசி எண்ணிற்குரிய குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறியத் தரப்படும். நிகழ்நிலையிலான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சை தொடர்பான விண்ணப்பத்திற்குரிய அறிவுறுத்தல்களைப் பதி விறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பத்தை நிரப்பும்போது அவ்வறிவுறுத்தல்களைப் பின் பற்றுக. விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்று பெறப்பட பின்னர், அதில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கூறப்படும் எந்தவொரு திருத்தமும் ஏற்கப்பட மாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பம் அல்லது விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பம் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

09. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது நிகழ்நிலையிலான முறைமையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணஞ் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடனட்டையைப் பயன்படுத்தி (Any Bank Credit Card):

ii. சர்வதேச கொடுக்கல் வாங்கல் வசதியைக் கொண்டுள்ள எந்தவொரு வங்கிப் பற்று அட்டை

மூலமும் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலைச் செலுத்துகை மூலம் / Flex செயலி மூலம் (Online Banking Method/ Flex App of Bank of Ceylon)

iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்படி முறை மூலம் பணம் செலுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல் இணையத்தளத்தில் பரீட் சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கொடுப்பனவு கிடைத்துள்ளது என்பது குறுந் தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறியத்தரப்படும். பரீட்சைக்குரிய முழுமையான கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அதில் குறைவாகவோ அல்லது மேலதிகமாகவோ செலுத்தப்பட்டால் உரிய விண்ணப்பம் நிராகரிக் கப்படும். மேற்படி முறைகள் மூலம் பரிட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படும் பிழைகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) இப் பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும், மீளப் பெறப்படு வதற்கோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படுவதற்கோ உரியதல்ல.

10. **பரீட்சை அனுமதிப்பத்திரம்:**

(1) வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகள் உள்ளோர் மாத்திரம் விண்ணப் பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில், விண்ணப்ப இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணபத்தை முழுமையாகச் சமர்ப்பிக்கும் விண் ணப்பதாரிகளுக்கு, பரிட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் நிகழ் நிலையில் மாத்திரம் அனுப்பப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களத்தால் இணையத்தள அறிவித்தல் மூலம் / குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறியத்தரப்படும். தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறாத விண்ணப்பதாரர் இருந்தால், அறிவித்தலில் கூறப்படும் விதத்தில் அதுகுறித்து பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரிட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரிக்கமுடியும். அவ்விசாரிப்பில் விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தனது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி ஆகியவற்றைப் பிழையின்றிக் குறிப்பிட்டு விசாரிப்புக் கடிதத்தை, இணையத்தள அறிவித்தலில் தரப்படும் மின்னஞ்சலுக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்விசாரிப்பில் பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்திசெய்து அனுப்பிய விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதியைத் தன்னுடன் வைத்திருத்தலும் பிரயோசனமானதாக இருக்கும். கிடைத்த அனுமதிப்பத்திரத்தைச் சரிபார்த்து, திருத்தமேதும் மேற்கொள்ள வேண்டியிருந்தால், காலந்தாழ்த்தாது, பரீட்சைத் திணைக்களத்தை அழைத்து, விண்ணப்பத்தின்படி உரிய திருத்தத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையில் இவ்வாறான திருத்தங்களுக்கான வேண்டுகோள் எதுவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

11. **பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தைச் சான்றுப்படுத்திக் கொள்ளுதல்:**

(I) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்ப தாரரது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பித்த ஒருவரது கையொப்பம் அவரது நிறுவனத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட இன்னொருவரால் சான்றுப் படுத்தப் வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத விண்ணப்பதாரியின் கையொப்பம் அவரது பகுதிக் கிராம அலுவலரால் அல்லது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரால் அல்லது சமாதான நீதிவானொருவரால் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளரொருவரால் அல்லது சட்டத்தரணியொருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் அல்லது பௌத்த விகாராதிபதியொருவரால், அல்லது நாயக்க பௌத்த மதகுருவால் அல்லது அருகிலுள்ள மத நிறுவனமொன்றின் மதத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

**பரீட்சைக்குத் தோற்றுதல்:**

(II) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் பரிந்துரைக்கப்படுகின்றவாறு பரீட்சை மண்டபத்திற்குச் செல்லுதல் வேண்டும். பரீட் சைக்குத் தோற்றும் முதலாவது தினத்தில், பரீட்சை மண்டபத் தலைவரிடம், தமது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை முன் னளித்தல் வேண்டும்.

(III) பரீட்சைகளை நடாத்தல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால்

வெளியிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி இணங்கியொழுதல் வேண்டும். அத்தகைய சட்டதிட்டம் மீறப்பட்டால், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உள்ளாக வேண்டியிருக்கும்.

குறிப்பு:-

பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரத்தை வழங்குதலானது, விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்று வதற்கோ அல்லது பதவிக்குரிய எல்லாத் தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதற்காகவோ ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதப்படலாகாது.

12. **ஆளடையாளம்:**

பரீட்சைக்குத் தோற்றுபவர் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மண்டப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் செல்லுபடியாகும்:

I. தேசிய அடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே, விண்ணப்பதாரி தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகக் கவசம் ஏதும் அணியாமலும், தொடர்பாடல் உபகரணமெதனையும் மறைத்து எடுத்துக்கொள்ளாமலும் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுடன், அவ்விரண்டையும் அணிந்துகொள்ளாமல் மண்டபத் தினுள் நுழைதல் வேண்டும். அதற்கு ஒத்துக்கொள்ளாத விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப் பட மாட்டார். மேலும், பரீட்சை மண்டபத்தில் நுழையும் போதிலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை முகத்தையும் வாய்ப் பகுதியையும் மூடாத வகையில் இருத்தல் வேண்டும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

இந்தப் பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளின்படி அதற்குத் தோற்றுவதற்குரிய தகைமை இல்லையெனக் காணப்பட்டால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது அதற்குப் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாவது, அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்பட முடியும். விண்ணப்பதாரி தமக்குத் தெரிந்துகொண்டே பொய்யான தகவலை வழங்கியுள்ளார் என அல்லது ஏதேனும் முக்கிய விடயத்தைத் தெரிந்துகொண்டே மறைத்துள்ளார் எனத் தெரியவந்தால், அல்லது வெளித் தெரிந்தால், அல்லது அவர் தான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது பொருத்தமற்றதெனத் தெரிந்துகொண்டே தோற்றி யிருந்தால், இது அவரது சேவைக்காலத்தினுள் ஏதேனும் சந்தர்ப்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால், அவர் உடனயாகச் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு அது காரணமாக அமையும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைத் திருப்திப் படுத்தாத விண்ணப்பதாரர்களின் தகைமை இரத்துச் செய்யப்படும்.

14. இந்த ஒழுங்குவிதிகளில் விபரமாக் கூறப்படாத, உரியதான மாற்றங்கள் ஏதேனும் இருந்தால், அவை பிரதம விலைமதிப்பீட்டாளரது தற்துணிபின்படி தீர்மானிக்கப்படும்.

15. இவற்றில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளான அறிவித்தளிடையே ஏதேனும் ஒவ்வாமைகள் தோன்றினால், இவற்றுள் சிங்கள மொழியிலான அறிவித்தலே மேலோங்கும்.

ஏ.எஸ். டபிள்யு. கே. நாணயக்கார,
அரசாங்க பிரதம
விலைமதிப்பீட்டாளர்.

03-532

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த உதவி கம்பனி பதிவாளர் நாயகம் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2026

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியில் காணப்படுகின்ற நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த உதவி கம்பனி பதிவாளர் நாயகம் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

i. கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியில் காணப்படுகின்ற நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III, உதவி கம்பனி பதிவாளர் நாயகம் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்படும் பரீட்சையினூடாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

ii. **எழுத்துப் பரீட்சை:** இப்பரீட்சை பின்வரும் இரண்டு (02) வினாத்தாள்களை கொண்டிருக்கும்

i. ஆங்கில மொழி
ii. பொது நுண்ணறிவு

02. **பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் ஒழுங்கு :**

இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026, யூலை மாதம் கொழும்பில் நடைபெறும்.

03. மொத்தமாக நிரப்பட்டவுள்ள பதவிவெற்றிடங்களின் எண்ணிக்கை இரண்டு (02) ஆகும். யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடத்திற்காக அல்லது பல வெற்றிடங்களுக்காக, காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களை விட அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்றால், நிரப்பப்பட வேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையானது நடைமுறை ஒழுங்கு விதிகளின் பிரிவு 92 இற்கு இணங்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்

04. **சேவை நிபந்தனைகள் :**

4.1 தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள், அரசாங்க சேவை நியமனங்களை ஒழுங்குபடுத்தும் பொது வான நிபந்தனைகள், தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள், மற்றும் 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு அமைவாகவும், அரசாங்க சேவைகள் ஆணைகுழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குவிதிகள், இதன்பின்னர் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்கள் அடங்கலாக, என்பவற்றிற்கு அமைவாகவும், சேவையின் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

4.2 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அரசாங்கத்தின் எதிர்கால முடிவுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். நீங்கள் ஓய்வூதியத்திட்டம் / விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அதற்கான பங்களிப்பை நீங்கள் அவ்வப்போது அரசு நிர்ணயித்துள்ளபடி செலுத்துதல் வேண்டும்.

4.3 இந்த நியமனம் மூன்று (03) வருட கால தகைமைகாண் காலத்தினைக் கொண்டுள்ளது. உதவி கம்பனி பதிவாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 03 ஆண்டுகளுக்குள் உத்தியோகத்தர்கள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.4 2020.10.16 ஆந் திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை இல.18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி, இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னதாக, அவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அவர் மற்றைய அரச கரும மொழியில் உரிய சித்தியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.5 குறித்த திகதியில் பதவியின் கடமைகளை பொறுப்பேற்கத் தவறும் அல்லது நியமிக்கப்பட்ட பதவிக்குறிய கடமைகளை ஏற்க மறுக்கும் எந்தவொரு விண்ணப்பதாரியின் நியமனத்தையும் இரத்துச் செய்யும் அதிகாரம் கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு உள்ளது.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

25.03.2025 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி, இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது பின்வருமாறு காணப்படும்.

ரூபா 82,150.00 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - 195,970.00 (25.03.2025 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க, சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆரம்ப படிநிலையில் சம்பளமாக ரூபா 82,150 செலுத்தப்படும்)

06. **தேவையான தகைமைகள் :**

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) சிறந்த நற்பண்புகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்
(iii) இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணி யாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வி/தொழில் ரீதியான தகைமைகள்/ அனுபவம்:

i. பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றி னால் வழங்கப்பட்ட சட்டமாணி (LL.B.) பட்டத்தினை பெற்றிருத்தல்.

மற்றும்

ii. உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமானம் செய்திருத்தல் வேண்டும்.

மற்றும்

iii. உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்யததன் பின்னர் சட்டத்தரணி ஒருவராக 03 வருடங்களுக்குக் குறையாத முனைப்பான தொழில்சார் அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) **வயது** :

21 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க விண்ணப்பதாரரின் பிறந்த திகதியானது 2005.04.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.04.20 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் அமைந்திருத்தல் வேண்டும்)

(ஈ) **தகைமைகளுக்கான வரையறைகள் :**

i. சமயரீதியானபதவியினைஅல்லதுஅந்தஸ்தினை வகிப்பவர் எவரும் விண்ணப்பிக்கவோ அல்லது நேர்முக பரீட்சையில் தோன்றுவதற்கோ அனுமதிக்கப்படமாட்டார்.

ii. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமை களாக குறிப்பிடப்பட்டுள்ளவற்றை அனைத்து வழிகளிலும் விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதிக்குள் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

07. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும்போது, நிகழ்நிலை முறைமையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் பணம் செலுத்தும் முறையினை மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும்.

i. ஏதேனுமொரு வங்கியின் கடனட்டை
ii. இணையவழி பணப்பரிமாற்றல் வசதியினைக் கொண்ட ஏதேனுமொரு வங்கியின் பற்று அட்டை
iii. இலங்கையின் வங்கியின் நிகழ்நிலை வங்கிச்சேவை முறைமை
iv. இலங்கையின் வங்கியின் ஏதேனுமொரு கிளை

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிட்ட முறைமைகளை பயன்படுத்தி பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சையுடன் தொடர்பான தொழிநுட்ப அறிவுறுத்தல்களின் கீழே உள்ளன.

(ஆ) உங்களது கொடுப்பனவு கிடைக்கப்பெற்றவுடன், குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் ஊடாக உங்களுக்கு அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுமையான தொகை கட்டாயமாக செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், கட்டணம் செலுத்தப்படாத அல்லது கூடுதலான தொகை செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட முறைமைகளினூடாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் ஏற்படக்கூடிய ஏதேனும் தவறுகளுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பாகமாட்டாது.

(இ) எந்தவொரு சூழ்நிலையிலும் பரீட்சைக் கட்டண மானது திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது

08. **விண்ணப்பிக்கும் முறைமை :**

8.1 பரீட்சைத் திணைக்கத்தின் இணைத்தளத்தில் (www.doenets.lk) “எமது சேவைகள்” → “நிகழ்நிலை விண்ணப்பங்கள் – ஆன்லைன் விண்ணப்பங்கள் (ஆட்சேர்ப்பு/E.B. தேர்வுகள்)” இனுள் பிரவேசித்து அதிலுள்ள விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து நிகழ்நிலை மூலம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்ப செயல்முறையானது 2026.03.20 ஆம் திகதி மு.ப.09:00 மணிக்கு ஆரம்பித்து 2026.04.20 ஆம் திகதி பி.ப. 09:00 முடிவடையும்.

8.2 தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண பொதுச்சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது தனிப்பட்ட கோப்பில் இடுவதற்காக தமது விண்ணப்பத்தின் பிரதி யொன்றை தங்களது திணைக்களத் தலைவருக்கு கட்டாயம் அனுப்புதல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது திணைக்களத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப் பத்தின் பிரதியொன்றினை சேவை உறுதிப்படுத்தல் கடிதத்துடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

8.3 காலதாமதாக விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கு விண்ணப்ப தாரி மட்டுமே பொறுப்பாவார்.

8.4 நிகழ்நிலை பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட வேண்டும். நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதியானது செல்லுபடியாகும் விண்ணப்பமா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்பது பற்றி முறைமையினை அணுகுவதற்கு பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்தப்படும்.

நிகழ்நிலை விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களை தரவிறக்கம் செய்து கொள்வதுடன் விண்ணபப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவற்றை கவனமாக பின்பற்றுதல் வேண்டும். அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் விண்ணப்பப் படிவத்தில் செய்யப்படும் திருத்தங்கள் செல்லுபடியானதாக கருதப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப் படும்.

8.5 இவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே தேர்வுக்கு விண் ணப்பித்துள்ளனர் எனும் அனுமானத்திற்கமைய, விண்ணப்பங்களை முறையாக பூர்த்தி செய்து, விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நிகழ்நிலையினூடாக அனுப்பப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அதனை குறிப்பிடும் அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும்/ விண்ணப்பதாரியின் கைத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி ஊடாக அறிவிக்கப்படும். விண்ணப்பதாரி யொருவர் தனது அனுமதி அட்டையினை பெற்றுக் கொள்ளாவிட்டால், அது தொடர்பாக அவர் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினை சரியாக குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றினை விளம்பரத்தில் வழங்கப்பட்டிருக்கும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்படும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப் பட்ட பிரதியொன்றினை வைத்திருப்பது பிரயோசனமானது. அனுமதி அட்டையினை பரீட்சித்ததன் பின்னர், அவசியமான திருத்தங்கள் ஏதேனுமிருப்பின் பரீட்சைத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும், அத்துடன் விண்ணப்பத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களை அவசியம் மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து அல்லது நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படும் திருத்தங் களுக்கான கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8.6 பரீட்சை அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்ப தாரியின் கையொப்பமானது முறையாக அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும். ஏதேனுமொரு அரசாங்க நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தியொருவராக இருப்பின் அவர் தனது கையொப்பத்தினை திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறில்லையெனில், குறித்த பிரிவுக்குரிய கிராம அலுவலர், அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, பௌத்த விகாராதிபதியினால் அல்லது தலைமை பிக்குவினால் அல்லது பிற மத ஸ்தானங்களுக்கு பொறுப்பாகவுள்ள மதத் தலைவர்களாக கருதக்கூடிய நிலையிலுள்ள ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

09. **பரீட்சை மண்டபத்திற்கு அனுமதித்தல்:**

(அ) ஒரு பரீட்சார்த்தி தனக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது கையொப்பத்தினை முறையாக உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையினை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், பரீட்சை நிலையத்திற்கு தான் முதலாவதாக தோன்றும் தினத்தன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டை இல்லாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பு இவ்வர்த்த மானி அறிவித்தலின் தொடக்கத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. பரீட்சையினை நடத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவர். இவ் விதிகளை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அபராதம் விதிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை கிடைத்திருப்பதென்பது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக கொள்ளப்படமாட்டாது.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் மண்டப அதிகாரி திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்க்காணும் ஏதேனும் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

i. தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் காதுகளை மூடுவதை தவிர்த்து பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். மேலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் உள்நுழைந்த பின்னர் பரீட்சை முடிந்து வெளியில் செல்லும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரரை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக முகம் மற்றும் காதுகளை மூடாமல் இருக்க வேண்டும்.

11. **பொய்யான தகவல் அளிப்பதற்கான தண்டனை:**

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும்போது மிகக் கவனமாக இருப்பதுடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்துக்குள் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்த்தை இரத்துச்செய்ய இடமுண்டு. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனுமொரு முக்கியமான தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் அவரது நியமனம் இரத்துச் செய்யப்பட இடமுண்டு.

12. **பரீட்சையின் நடைமுறையும் மொழி மூலமும்:**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும்.
(ஆ) பரீட்சார்த்தி தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

13. **நியமனத்திற்காக தெரிவுசெய்யும் முறைமை :**

i. **எழுத்துப் பரீட்சை :**

இவ்வறிவித்தலின் பந்தி 01 (ii) இல் குறித்துரைக்கப்பட்ட பாடங்களை உள்ளக்கிய இரண்டு (02) வினாப்பத்திரங்களில் எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் நாற்பது வீதமான (40%) புள்ளிகளை பெறுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் இரு வினாப்பத்திரங்களிலும் தோற்ற வேண்டும்.

பாடங்கள் : 1. ஆங்கில மொழி
2. பொது நுண்ணறிவு

* எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்:

| *தொ. இல.* | *பாடம்* | *காலம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள் (குறைந்தபட்சம்)* |
|---|---|---|---|---|
| 01. | ஆங்கில மொழி | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 02. | பொது நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

(அ) **ஆங்கில மொழி:**

i. **கிரகித்தல் :**

200 சொற்களுக்கு குறையாத தெரிவுசெய்யப்பட்ட எழுத்துப் பத்தியொன்றை வாசித்து, விளங்கி, பதிலளிப்பதற்கான ஆற்றல் பரீட்சிக்கப்படுகிறது.

ii. **இலக்கணம் :**

காலங்கள், பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், நேர்கூற்றும் அயற்கூற்றும், செய்வினையும் செயற்பாட்டு வினையும், பால், இடைச்சொற்கள் ஆகிய பகுதிகளில் காணப்படும் பொதுவான தெளிவு பரீட்சிக்கப்படுகிறது.பரீட்சார்த்தியின் இலக்கண அறிவு, சொல்வளம், கிரகித்தல் என்பனவும் பரீட்சிக்கப்படுகிறது. கட்டாயமாக அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ஆ) **பொது நுண்ணறிவு :**

வாய்மொழி, எண் மற்றும் உருவகம் சார்ந்த பின்னணியில் வழங்கப்பட்ட கேள்விகள் ஊடாக பரீட்சார்த்தியின் கிரகித்தல் மற்றும் நுண்ணறிவு என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கத்தை கொண்டது. வினாப்பத்திரமானது பல்தேர்வு மற்றும் குறுகிய விடை வினாக்கள் ஐம்பதினை (50) கொண்டிருப்பதுடன், பரீட்சார்த்திகள் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

2. **நேர்முகப் பரீட்சை:**

(அ) எழுத்துப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு தாளிலும் நாற்பது சதவீதத்திற்குக் குறையாத (40%) புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமாக, தகுதி வரிசையின் அடிப்படையிலான பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்று பரீட்சார்த்திகளின் அடிப்படைத் தகைமைகளையும் சான்றிதழ்களையும் சரிபார்க்கும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

குறிப்பு : நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிப்பதானது நியமனத்திற்கான தகுதியாக கொள்ளப்படாது.

❖ வெற்றிடத்தினை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவதற்கான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

14. இலங்கை பரீட்சைகள் திணைக்களம் ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக்கொண்ட புள்ளிகளையும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளையும் குறித்துக்காட்டும் பெறுபேற்றுத் தாளினை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும், நியமன அதிகாரி பெறுபேறுகளை வெளியிடும் திகதியினை அறிவித்ததன் பின்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கும், அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தினூடாக அதனை வெளியிடும்.

15. இங்கு வழங்கப்படாத எந்தவொரு விடயமும் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். அனைத்து பரீட்சார்த்திகளும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பொது பரீட்சை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கிச் செல்ல வேண்டும்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

கே.ஏ.பி. டீ சில்வா,
கம்பனிகள் பதிவாளர் நாயகம்,
(பதில் கடமை).

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல.400, “சமாகம் மெதுர”,
டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2026, மாச்சு 11.

03-576

## நீதிச்சேவை ஆணைக்குழு

## அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2026 இற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

   இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2. **சேவை நிபந்தனைகள்:**

   2.1 அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் அட்ட வணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத் தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஆட்சேர்க்கப் படுகின்ற நீதிமன்ற சுருக்கெழுத் தாளர் சேவை உத்தியோகத்தர்கள் தாபனவிதிக் கோவைக்கும், நிதிப்பிரமாணங்களுக்கும், நீதிச் சேவை ஆணைக்குழுவினால் தற்போது வெளி யிடப்பட்டுள்ள மற்றும் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கும், பணிப்புக் களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ் படிதல் வேண்டும்.

   2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். அட்டவணைப் படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவை யின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப் பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

   2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

   2.4 அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 18/2020 மற்றும் அதற்கேற்ப நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 456 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்குரிய இரண்டாம் நிலைப்படி பதவியில் இணைந்து 3 வருடத்தினுள் மற்றைய அரசமொழி தொடர்பிலான தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. **சம்பளக் குறியீடு** – (MN 2-2025)
   சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) - ரூ. 48,470.00 – 10 x 540 – 11 x 630 – 10 x 1,010 – 10 x 1,190 - ரூ. 82,800.00

   நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 48,470.00 ஆரம்ப சம்பளமாக நிறுவப்பட்டு அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் இல. 10/2025 மற்றும் 25.03.2025 திகதி சுற்றுநிருபத்தின் அட்டவணை III இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

4. **இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்திற்குரியது.**

   ஓய்வூதிய சம்பளத்துடன் கூடியது என மேலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் அவர்களுக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசு மற்றும்/ அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எதிர் காலத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அவர்கள் கீழ்ப் படிதல் வேண்டும்.

5. **தகைமைகள் :**

   அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) 20.03.2026 திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(ஈ) அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(உ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. சிங்களம்/ தமிழ் மொழி அல்லது ஆங்கிலம் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் சிங்கள மொழிக்கும், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ் மொழிக்கும், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழிக்கும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;)
II. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசாங்க பதிவுடைய பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பாடநெறியினை சிறந்த முறையில் பயின்று அதில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு – சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடபடிமுறைகள் :**
இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | *வினாப்பத்திரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் (சிங்களம்/ தமிழ்) | 100 | 40 |
| 02. | உளச்சார்பு (சிங்களம்/ தமிழ்) | 100 | 40 |
| 03. | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டு சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பரீட்சையில் சித்திபெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாத்திரமே "மொழித்திறன்" மற்றும் "உளச்சார்பு" வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பரீட்சைக்காக தாம் விண்ணப்பிக்கும் பிரிவிற்குரிய வினாப்பத்திரத்தை தெரிவு செய்ய வேண்டும்.

**பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| | *வினாப்பத்திம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | மொழித் திறன் (சிங்களம்/ தமிழ்) | இவ்வினாப்பத்திரம் பரீட்சாத்தியின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும். |

| | *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 02 | உளச்சார்பு (சிங்களம்/ தமிழ்) | இவ்வினாப்பத்திரமானது பரீட்சாத்தியின் எண் சார்ந்த திறன், தர்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும். |
| 03 | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) | சுருக்கெழுத்து (சிங்களம்)<br>நிமிடத்திற்கு 70 சொற்கள் என்ற ஆகக்குறைந்த வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியொன்றை சுருக்கெழுத்து செய்து அதனை நிமிடத்திற்கு 07 சொற்கள் என்ற வேகத்தில் பிரதியாக்கல் வேண்டும்.<br>தட்டச்சு (சிங்களம்)<br>தரப்படும் 500 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 25 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |
| | | சுருக்கெழுத்து (தமிழ்)<br>நிமிடத்திற்கு 70 சொற்கள் என்ற ஆகக்குறைந்த வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியொன்றை சுருக்கெழுத்து செய்து அதனை நிமிடத்திற்கு 07 சொற்கள் என்ற வேகத்தில் பிரதியாக்கல் வேண்டும்.<br>தட்டச்சு (தமிழ்)<br>தரப்படும் 500 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 25 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல்.<br><br>சுருக்கெழுத்து (ஆங்கிலம்)<br>நிமிடத்திற்கு 80 சொற்கள் என்ற ஆகக்குறைந்த வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியொன்றை சுருக்கெழுத்து செய்து அதனை நிமிடத்திற்கு 08 சொற்கள் என்ற வேகத்தில் பிரதியாக்கல் வேண்டும்.<br>தட்டச்சு (ஆங்கிலம்)<br>தரப்படும் 600 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |

**குறிப்பு** : அனைத்து எழுத்து மூல விடைப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள் மற்றும் / அல்லது பிரயோக ரீதியிலான வினாக்களைக் கொண்டவையாகும்.

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரி களிலிருந்து கீழ்நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

**பரீட்சை பெறுபேறுகள்** : நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

8. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை:**

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தொரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்

9. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 400.00 ஆகும். இக்கட்டணத்தை "**நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்**" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின்

நிழற்படப்பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப் பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத் தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப் பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகவா உள்ளனவா என விண்ணப்பதாரி கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலமே தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபாலில் 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "அட்டவணைப் படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026" என்பதனை தெளிவாக எழுத வேண்டும். 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. **பரீட்சைக்குத் தோற்றல் :**

விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிடவேண்டும். கொழும்புக்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள் எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினை பெற்றுக் கொள் வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ள டக்கிய கோரிக்கை கடிதமொன்றை 0112421206 அல்லது 0112446111 இலக்கங்களுக்கு அனுப்புவ துடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு விண்ணப்ப தாரியிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும்.

12. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

13. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டவிதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

குறிப்பு – விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

14. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2026, மாச்சு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2026**

☐

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும்.
பரீட்சைக்குத் தோற்றும் மொழியை தெரிவு செய்க.
சிங்களம் -1
தமிழ் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் தரம் III ஆனது கீழ்வரும் பிரிவுகளைக் கொண்டதாகும்.
பரீட்சைக்குத் தோற்றும் பிரிவை தெரிவு செய்க.
சிங்களம் - 1
தமிழ் - 2 ☐
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

02. பிரத்தியேக தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி ........................................................................ ........................... ........................................................................................................................................

(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A. P. K.

2.2 முழுப்பெயர் : ........................................................................................................................

(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

2.3 முழுப்பெயர் : ........................................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

2.4 பிரத்தியேக முகவரி : ...............................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

2.5 வசிக்கும் மாவட்டம் : ...............................................................................................................

2.6 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : .................. ........................................................................................................................................

2.7 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.8 பிறந்த திகதி : .....................................

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2.9 2026.03.20 ஆம் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

2.10 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.) ☐

2.11 சமூக அந்தஸ்த்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

2.12 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ……………………. கையடக்க தொலைபேசி : ……………

தொலைநகல் : …………………

03. கல்வித் தகைமைகள் :

3.1 க.பொ.த.(சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள்:

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................

(2) பரீட்சை சுட்டெண் : ............................

(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* | *விடயம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

3.2 க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :
(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

04. சுருக்கெழுத்து தொடர்பாக பயின்றுள்ள பாடநெறிகள் : ....................................................
(பூர்த்தி செய்துள்ள பாடநெறிகளின் சான்றிதழ்களை இணைக்குக.)

05. வேறு தகைமைகள் : ...................................................................................................................
..........................................................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?
(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுங்கள்),

ஆம் ☐ இல்லை ☐

'ஆம்' எனின் விபரங்களை குறிப்பிடுக. ..........................................................................

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...................................

பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................

செலுத்திய பணம் : ...................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும். |
| (பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.) |

08. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை தாங்கிக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

…………………  …………………………………
திகதி  விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு. /திருமதி/செல்வி ………………………… என்பவரை நான் பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் …………………….. திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………                                        ………………………………………
திகதி                                        கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ………………………..
பதவி : ………………………………………………
முகவரி : ……………………………………………
(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

**திணைக்களத் தலைவரின் விதந்துரை**

இந் ……………………………………….. சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ………………………என்பவருக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் 20.03.2026 திகதிக்கு 35 வயதிற்கு மேற்படாதவர் என்பதனையும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி :                                        திணைக்களத் தலைவரின் கையொப்பம் :
                                        உத்தியோகபூர்வ முத்திரை :

03-624